Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 22, 2023

புதன்கிழமை நவம்பர் 22, 2023 | ஒளி: 09 கதிர் 133 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## பட்ஜெட் பாஸ்

2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் (பட்ஜெட்) இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது. பட்ஜெட்டுக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அதனடிப்படையில் 45 மேலதிக வாக்குகளால் பட்ஜெட் நிறைவேற்றப்பட்டது.

### பொருளாதாரக் கொலையாளிகளின்

# “குடியுரிமையை இரத்துச் செய்”



- **அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அறிய வேண்டியது அவசியம்**
- **பொருளாதாரக் கொலைகாரர்களின் குடியுரிமைகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும்**

உயர்நீதிமன்றத்தால் பெயரிடப்பட்ட ராஜபக்ஷர்கள் உள்ளிட்ட பொருளாதார கொலையாளிகளின் குடியுரிமைகள் இரத்துச் செய்யப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச, பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) கோரியுள்ளார்.

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் செவ்வாய்க்கிழமை (21) கூடியது. பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து விசேட கேள்விக்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு நேரம் வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## மாவீரர் வாரம் ஆரம்பமானது

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27ஆம் திகதி தமிழ் மக்களால் அனுஷ்க்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2



## “பேச்சு தோற்றால் ஆட்சி அவுட் ”

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் எவராலும் இந்த நாட்டை ஒரு வாரத்துக்கு கூட ஆட்சி செய்ய முடியாது. இதுதான் உண்மை என போக்குவரத்து, ஊடகத்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## “நரிகளுக்கு நான் பயந்தவன் அல்ல”

**சபை குழப்பத்துக்கு பின் சஜித் ஆக்ரோஷம்**

பொருளாதார கொலையாளிகள் கோட்டாபய, மஹிந்த, பசில் என பெயர் குறிப்பிட்டுக்கூறி இவர்கள் தொடர்பில் பாராளுமன்றம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்னவென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியதால், கொதித்தெழுந்த பொதுஜன பெரமுன எம்.பி.க்கள் சிலர், சஜித்தை தாக்க முற்பட்டதுடன் அவரின் கையிலிருந்த கோப்புக்களையும் பறித்தெடுத்தனர்.

இதனால் சபையில் பதற்றநிலை ஏற்பட்டதையடுத்து, சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு செவ்வாய்க்கிழமை (21) ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

சபை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், கருத்துரைத்த சஜித், “நரிகளுக்கு நான் பயந்தவன் அல்ல. தனி ஒருவனாக நான் தயார். முடிந்தால் வாருங்கள் பார்க்கலாம்” என அழைத்தார்.

தொடர்ச்சி P2

## “பாடத்தை ஆளும் தரப்பு கற்கவில்லை”

பொருளாதார படுகொலையாளிகளை உயர்நீதிமன்றம் அடையாளப்படுத்தியுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. போராட்டத்தின் ஊடாக நாட்டு மக்கள் கற்றுக்கொடுத்த பாடத்தை ஆளும் தரப்பு இன்றும் கற்றுக்கொள்ளவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### இலங்கை– இந்திய பத்திரிகை

## பேரவைகளுக்கு இடையில் ஒப்பந்தம்

**உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக யோசனைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது**

இலங்கை பத்திரிகைப் பேரவை மற்றும் இந்தியாவின் பத்திரிகைப் பேரவைக்கும் இடையில் 05 ஆண்டுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 2018.11.16 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டுள்ளது. குறித்த ஒப்பந்தத்தின் செல்லுபடியான காலப்பகுதி தற்போது முடிவடைந்துள்ளமையால், மேலும் 05 ஆண்டுகளுக்குப் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பூச்சிக்கொல்லி அருந்திவிட்டு வகுப்புக்குச் சென்ற மாணவன்

பூச்சிக்கொல்லியை அருந்திய நிலையில் பாடசாலைக்கு வந்த மாணவன், வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் (21) அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் பிராந்திய கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் பிரதான தமிழ் பாடசாலையில் 10ஆம் ஆண்டில் கல்விக் கற்கும் 16 வயதுடைய மாணவனே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2


### வட்டுக்கோட்டை விவகாரம்

## மூவரடங்கிய குழு நியமனம்

■ *நிதர்ஷன் வினோத்*

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்டுள்ள விரும்பத்தகாத செயற்பாடு தொடர்பில் உயர் அதிகாரிகள் மூவர்

தொடர்ச்சி P2



## “தீ மூட்டாதீர்கள் தீயை அணையுங்கள்”

தீ மூட்டும் நடவடிக்கைகளுக்கு அன்றி தீயை அணைக்கும் நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். இந்த முறை வரவு-செலவுத் திட்டத்தில் நிதியொழுக்கம் காணப்படுகிறது. அது நாட்டிற்கு மிகவும் அவசியம் என முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவரும் எம்.பி.யுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்ற வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### இளைஞர் உலகக் கிண்ணம்

## இலங்கை நீக்கம்

**சர்வதேச கிரிக்கெட் பேரவை விதித்த தடை தொடர்ந்து அமுலில் இருக்கும்**

2024 ஜனவரி மாதம் இலங்கையில் நடைபெறவிருந்த 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ண (இளைஞர் உலகக் கிண்ணம்) போட்டியை இலங்கையில் இருந்து நீக்கி தென்னாபிரிக்காவிற்கு வழங்க சர்வதேச கிரிக்கெட் பேரவை செவ்வாய்க்கிழமை (21) பிற்பகல் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

## “அரகலயவின் குழந்தை அரகலயவில் புதையக் கூடாது”

**ஜனாதிபதிக்கு கருணாகரம் அறிவுரை**




அரகலயவிலிருந்து நெப்போலியன் தோன்றியதைப் போல நமது நாட்டின் சகல பிரிவினரதும் அதிருப்தி ஏற்படுத்திய அரகலயவின் குழந்தையாக நீங்கள் ஜனாதிபதியாகி உள்ளீர்கள். இன்னுமொரு புதிய அரகலயவில் நீங்கள் புதையக் கூடாது என்பதே எனது அவாவாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட

தொடர்ச்சி P2

## கம்பனிகள் இணங்காவிடின் தொழிற்சங்க நடவடிக்கை

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை வகுப்பதற்கான விசேட கலந்துரையாடலொன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனில், செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# "குடியுரிமையை இரத்துச் செய்"

ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலரின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில், தனது உரையை தொடர்ந்த சஜித் பிரேமதாச,

நீதித்துறையின் சுதந்திரத்தைப் பிரதிபலித்து நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்தாக்கிய பொருளாதாரக் கொலையாளிகளை அம்பலப்படுத்தி, வரலாற்றுத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியிருந்தாலும், இத்தரப்பினர் இன்னமும் அரச அனுசரணையின் கீழ் சலுகைகளை அனுபவித்து தங்கள் வழமையான சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர் என்றும் இந்த முடிவை அவர்கள் மதிக்கவில்லை. அவர்களின் தவறான முடிவுகளுக்கு அனைத்து இலங்கையர்களுமே விளைவுகளை ஈடு கட்ட வேண்டியுள்ளது என்றார்.

இவர்களுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கப்போகும் தீர்மானம் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருப்பதாகவும், எனவே அரசாங்கத்தால் எத்தகைய மெத்தனமான போக்கு ரீதியான நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது என்பதனால், அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அறிய வேண்டியது அவசியம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ,கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, பி.பி.ஜயசுந்தர, அஜித் நிவார்ட் கப்ரால், எஸ்.ஆர்.ஆடிகல, டபிள்யூ.டி.லக்ஷ்மன், சமந்த குமாரசிங்க மற்றும் நிதிச் சபை இணைந்து இந்த வங்குரோத்தை மேற்கொள்ள ஏற்பாடு செய்திருந்தமை தெரியவந்துள்ளது. அவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வியெழுப்பினார்.

இந்தத் தீர்ப்பின் பிரகாரம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட நபர்களுக்கு எதிரான விடயங்களை ஆராய்ந்து அறிக்கையிடவும், குறித்த நபர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை உடனடியாக நியமித்து, இந்த பொருளாதாரக் கொலைகாரர்களின் குடியுரிமைகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## "பாடத்தை ஆளும் தரப்பு கற்கவில்லை"

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்ற வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மோசடியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் தற்றுணிவு ஜனாதிபதிக்கு இல்லை. ஆனால், உயர்நீதிமன்றம் தற்றுணிவுடன் பொருளாதார படுகொலையாளிகளை பகிரங்கப்படுத்தியுள்ளது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆளும் தரப்பினர் ஏற்க மறுக்கிறார்கள். ஊழல்வாதிகளை தண்டிக்க வேண்டும், மோசடி செய்யப்பட்ட அரச நிதியை அரசுடமையாக்க வேண்டும் என நாட்டு மக்கள் போராட்டத்தில் வலியுறுத்தினார்கள். போராட்டத்தில் இருந்து ஆளும் தரப்பின் இன்றும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தி ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள் என்றார். மேலும், பொருளாதார படுகொலையாளிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள தரப்பினருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை என்ன? சட்டவாட்சி கோட்பாடு சகல தரப்பினருக்கும் சமமாக நடைமுறைப்படுத்த வேண்டும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் தேசிய வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு எவ்வித திட்டங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. மாறாக வரி அதிகரிப்பதையும், தேசிய வளங்களை விற்பதையும் பிரதான கொள்கையாக கொண்டுள்ளது என்றார்.

## "தீ மூட்டாதீர்கள் தீயை அணையுங்கள்"

அரச மற்றும் எதிர்க்கட்சியினரால் கருத்துக்கள் முன்வைக்கப்படுவது வழமையாகும். எனினும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் நாம் தனிப்பட்ட நோக்கங்களுக்கு அப்பால் இம்முறை வரவு-செலவுத் திட்டத்தைப் பார்ப்பது அவசியமாகும்.

எமக்கு இரண்டு வழிகள் கிடையாது. நாம் எப்போதும் மக்களின் வழியிலேயே பயணிக்கின்றோம். அந்த வகையில் மக்களுக்குப் பயனுள்ள வரவு -செலவுத் திட்டத்திற்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். இந்த வரவு - செலவுத் திட்டத்தில் குறைகள் இல்லாமலில்லை. அந்த வகையில், மக்களோடு இணைந்து நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது அவசியம். அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு நாம் எப்போதும் ஆதரவு வழங்குவோம் என்றார்.

## பூச்சிக்கொல்லி அருந்திவிட்டு வகுப்புக்குச் சென்ற மாணவன்

அந்த பாடசாலையின் ஆசிரியர்கள் சிலர் தன்னையும் தனது சகோதரியையும் தொடர்ந்து திட்டியதால் மனமுடைந்து, தோட்டத்தில் இருந்த பூச்சிக்கொல்லி திரவத்தைக் குடித்துவிட்டு பாடசாலைக்கு வந்ததாக வட்டவளை வைத்தியசாலை வைத்தியர்களிடம் பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவித்துள்ளார்.

பூச்சிக்கொல்லி மருந்தைக் குடித்துவிட்டு மாணவன் பாடசாலைக்கு வந்ததாகப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களிடம் தெரிவித்ததையடுத்து, ஆசிரியர்கள் உடனடியாக மாணவனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அனுமதித்துள்ளனர்.

## பேரவைகளுக்கு இடையில் ஒப்பந்தம்

அதற்கான உத்தேச வரைபு ஒப்பந்தத்திற்கு வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைத்துள்ளது. அதற்கமைய, உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதனடிப்படையில், விடயஞ்சார் செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளை நடத்துவதன் மூலம், வெகுசன ஊடகவியலாளர்களைத் தெளிவூட்டலும், திறன் விருத்தி செய்தலும், இருதரப்பினர்களுக்கிடையே வளங்களைப் பரிமாற்றிக் கொள்கின்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும், வெகுசன ஊடக ஒழுக்கநெறிக் கோவையை மேம்படுத்துவதற்கும் ஏற்புடைய வகையிலான செயற்பாடுகள் மற்றும் வெகுசன ஊடகச் சுதந்திரம் மற்றும் அமைதியான வெகுசன ஊடகப் பாவனையை பரப்புதல் போன்ற துறைகளுக்குரிய இருதரப்பினர்களிடையேயான ஒத்துழைப்புக்கள் மேம்படுத்தப்படும் என்றும் அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாவீரர் வாரம் ஆரம்பமானது

நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த தமது உறவுகளை நினைந்து வருடம்தோறும் கார்த்திகை 27 மாவீரர் தின நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் தேசமெங்கும் அனுஷ்டிக்கப்படுவது வழமையாகும்.

அந்தவகையில், இவ்வாண்டும் மாவீரர் தின நிகழ்வுகள் மேற்கொள்ள தமிழர் தாயகப் பகுதிகள் மாத்திரமின்றி தமிழ் மக்கள் வாழும் தேசமெங்கும் தயாராகி வருகிறது அந்தவகையில் கார்த்திகை மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் ஆரம்பிக்கப்படுவது வழமை. அந்தவகையில், முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல்வேறு இடங்களில் மாவீரர் வாரத்தின் ஆரம்ப நிகழ்வு உணர்வுபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாள் நிகழ்வுகள செவ்வாய்க்கிழமை (21) உணர்வுபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## "பேச்சு தோற்றால் ஆட்சி அவுட்"

இலங்கைக்கு இரண்டாம் கட்ட நீடிக்கப்பட்ட கடன் தொகையை வழங்குவது குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் எதிர்வரும் மாதம் 2ஆம் திகதி முக்கிய பேச்சுவார்த்தையில் இடம்பெறவுள்ளது. பொருளாதார மீட்சிக்காக தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் வெற்றி பெற்றால் தான் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 48 மாதகால கடன் ஒத்துழைப்பை வழங்கும் அதனை இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை துரதிர்ஷ்டவசமாக தோல்வியடைந்து, கடன் மறுசீரமைப்பும் தோல்வியடைந்தால் எவராலும் இந்த நாட்டை ஒருவாரத்துக்கு கூட ஆட்சி செய்ய முடியாது. இதுதான் உண்மையாகும் என்றார்.

## "நரிகளுக்கு நான் பயந்தவன் அல்ல"

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் செவ்வாய்க்கிழமை (21) கூடியது. பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து விசேட கேள்விக்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு நேரம் வழங்கப்பட்டது.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் , நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்ல காரணமானவர்கள் என, பொருளாதார கொலையாளிகள் என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மஹிந்த , கோட்டாபய, பசில் உள்ளிட்டவர்கள் தொடர்பாகப் பாராளுமன்றம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்னவென்று கேள்வி எழுப்பி உரையாற்றிக் கொண்டிருந்தார்.

அரச தரப்பின் பொதுஜன பெரமுன எம்.பி.க்கள் சிலர் அவரின் உரைக்கு எதிராகக் கூச்சலிட்டனர். ஒழுங்குப்பிரச்சினைகளை எழுப்பினர். எனினும் இந்த இடையூறுகளைக் கட்டுப்படுத்த சபாநாயகர் முயலவில்லை.

அரச தரப்பினரின் கூச்சல் குழப்பங்களை, ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. நளின் பண்டார, தனது கையடக்க தொலைபேசியில் வீடியோ எடுத்துக்கொண்டிருப்பதைக் கண்ட சபாநாயகர், அந்த நடவடிக்கையை நிறுத்துமாறு பல தடவைகள் தெரிவித்தார். என்றாலும் அவர் தொடர்ந்து வீடியோ எடுத்துக்கொண்டிருந்தார்.

இராஜங்க அமைச்சர் சனத் நிஷாந்த, எதிர்க்கட்சித் தலைவரை நெருங்கி அவரை தாக்க முயற்சித்தபோது, படைக்கல சேவிதர் உட்பட உதவியாளர்கள் எதிர்க்கட்சித் தலைவரை நெருங்கவிடாமல் அவரையும் ஏனைய அரச தரப்பு எம்.பி.க்களையும் தடுத்தனர்.

எனினும், இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, திடீரென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கையிலிருந்த கோப்புக்களைப் பறித்துக்கொண்டு சென்றார்.

சபை நடுவுக்கு வந்தவர்களை அங்கிருந்து செல்லுமாறு சபாநாயகரும் தெரிவித்தார். எனினும் அரச தரப்பினர் அதனைக் காதில் வாங்கவில்லை. இதனையடுத்து, சபை நடவடிக்கையை 5 நிமிடங்களுக்கு இடைநிறுத்துவதாகக் காலை 10,35 மணிக்கு அறிவித்து சபை நடவடிக்கையை இடைநிறுத்தினார்.

சபை நடவடிக்கையை 5 நிமிடங்களுக்கு இடை நிறுத்துவதாக சபாநாயகர் 10: 35 மணிக்கு அறிவித்த நிலையில், மீண்டும் சபை நடவடிக்கை 11: 15 மணிக்கே சபாநாயகர் தலைமையில் ஆரம்பித்தது.

## இலங்கை நீக்கம்

அஹமதாபாத்தில் தற்போது நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் விசேட மாநாட்டில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதுடன், இலங்கை அணியை பங்குபற்றுவது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ஷம்மி சில்வா கலந்துரையாடி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாகத்தில் அரசியல் செல்வாக்கு செலுத்தியதற்காக இலங்கை கிரிக்கெட் சங்கத்திற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை விதித்த தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூவரடங்கிய குழு நியமனம்

அடங்கிய விசாரணை குழுவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள ஜெனரத் தெரிவித்தார்

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலரால் சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் மேலும் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி அடங்கிய குழுவினர் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

மேலும், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் நான்கு உத்தியோகத்தர்கள் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளார்கள் என இனங்காணப்பட்டதன் அடிப்படையில், அவர்கள் நால்வரும் தற்பொழுது மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்வாங்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் மா அதிபரினாலும் எமக்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பொலிஸ் நிலையம் ஒன்றில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை தொடர்பில் உரிய விசாரணைகள் நடைபெற்று விசாரணை முடிவில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் குறித்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் அச்சமடைய தேவையில்லை என தெரிவித்தார்

எனினும் தற்பொழுது வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் நான்கு உத்தியோகத்தர்கள் இடமாற்றப்பட்டுள்ளார்கள் ஏனென்றால் அவர்கள் அதேஇடத்திலே கடமையாற்றினால் அங்குள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை அழித்து விடுவார்கள் என்ற காரணத்தினால் அவர்களை இடம் மாற்றி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதே உண்மையாகும் என்றார்.

## "அரகலயவின் குழந்தை அரகலயவில் புதையக் கூடாது"

எம்.பி.யான கோவிந்தன் கருணாகரம் கேட்டுக்கொண்டார்.

உங்கள் புத்தி ஜீவித் தனத்தை சொற்பொழிவுக்குள் மட்டும் மட்டுப்படுத்தாது உங்கள் அறிவு ஞானத்தை வாத விவாதத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தாது நாட்டின் அபிவிருத்திக்கு அர்ப்பணியுங்கள் என்றும் கேட்டுக்கொண்டார்.

2024 வரவு- செலவுத் திட்டத்தின் மூலமான எனது ஒட்டு மொத்த சுருக்கமான கணிப்பு "தம்பி கால்நடை பேச்சு பல்லக்கு" அது போலத்தான் இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அடைய முடியாத இலக்குகளை எடுத்துரைத்து நாட்டையும் நாட்டு மக்களையும் கற்பனை உலகில் சஞ்சரிக்க வைத்துள்ளார் என்றும் கருணாகரன் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு நாட்டின் வரவு-செலவுத் திட்டம் என்பது வெறுமனே இலக்கங்களுக்கும் வார்த்தை ஜாலங்களுக்கும் மட்டுப்பட்டதல்ல. மாறாக நாட்டின் எதிர்காலம் தொடர்பான, நாட்டின் ஆக்கபூர்வமான, அறிவுபூர்வமான, விஞ்ஞான பூர்வமான, அடையக் கூடியதான முன்மொழிவுகளை எடுத்தியம்பவேண்டும். அது நம்பகத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்றார்.

அத்துடன், வெறுமனே விலைவாசி உயர்வைப் பிரகடனப்படுத்துவதாகவோ, நிவாரணங்களை எடுத்துரைப்பதாகவோ இருக்கக் கூடாது. ஆனால் கடந்த பல தசாப்தங்களாக எம் ஆட்சியாளர்கள். வரவு-செலவுத் திட்டத்திற்கு பிழையான வரைவிலக்கணத்தை மக்கள் நம்பும் படி வளர்த்து விட்டார்கள். அத்தகைய பிழையான வரைவிலக்கணத்துக்கு உட்பட்ட வரவு-செலவுத் திட்டமே இந்த வரவு-செலவுத் திட்டமாகும் என்றார்.

மேலும், எமது ஜனாதிபதி இன்னும் பழைய பிச்சைக்காரன் தோண்டுவதைப்போல வங்குரோத்தான நாட்டை நான் பாரமெடுத்தேன். அழைப்பு விடுத்த எவரும் நாட்டைப் பாரமெடுக்கமுன்வராத போது நான் நாட்டைப் பாரமெடுத்தேன். என்று கதைகள் பேசுவதில் இனிப் பயனில்லை. எவரும் இத்தகைய சவால் மிக்க நிலையில், நாட்டை ஏற்க முன்வராத போது, இத்தகைய சவால்களைச் சமாளிப்பீர்கள் என்ற நம்பிக்கையில்தான் அரசியலமைப்பின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நீங்கள் ஜனாதிபதி ஆகியுள்ளீர்கள்.

எனவே இன்று உங்கள் முன்புள்ள முக்கிய கடமை பண்டைப் பழங்கதைகள் பேசுவதல்ல. உங்கள் முன்னுள்ள சவால்களை வெற்றி கொண்டு காட்டுவதேயாகும் என்றார்.

# கம்பனிகள் இணங்காவிடின் தொழிற்சங்க நடவடிக்கை

இக்கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநரும் இ.தொ.காவின் தலைவருமான செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் மற்றும் இ.தொ.காவின் உயர்மட்ட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

ஐந்து மணிநேரத்துக்கும் அதிகமாக இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், சர்வதேச சந்தையில் காணப்படும் தேயிலையின் விலை மற்றும் அதிகரித்துள்ள மக்களின் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப சம்பளப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும் எனவும், கம்பனிகள் சம்பள உயர்வு குறித்து இணக்கம் தெரிவிக்காத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் வெறும் வியாக்கியானம் மட்டுமே பேசிக்கொண்டு கூட்டு ஒப்பந்தம் ஒரு கூத்து ஒப்பந்தம் எனவும், கூட்டு ஒப்பந்தம் மரண சாசனம் எனவும் பல விமர்சனங்களை முன்வைத்த விமர்சகர்கள், மக்கள் இன்னல்களுக்கு முகம் கொடுக்கும் போது காணவில்லை. இ.தொ. காவால் கூட்டு ஒப்பந்தம் ரத்து செயப்பட்ட போதிலும் மக்களுக்காக தொடர்ந்தும் இ.தொ. கா குரல் கொடுக்கும் என தெரிவிக்கப்பட்டது.

# எச்சில் உமிழ்ந்து திட்டி தீர்த்த மக்கள்

■ பு. கஜிந்தன்

வட்டுக்கோட்டை பொலிஸாரின் கொடூர தாக்குதலுக்கு உள்ளான நிலையில், சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த அலெக்ஸ் என்ற இளைஞனின் மரணம் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில், குறித்த இளைஞனின் சடலம் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வீட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பொலிஸார் 785 வழித்தட வீதியை முற்றாக வீதித்தடை மூலம் மூடி பயணிகளின் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறு விளைவித்துள்ளனர். இதனால் பயணிகள் சுற்றுப்பாதையை பயன்படுத்தி பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஐந்து பொலிஸ் நிலையங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கடமையில் அமர்த்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

வீதியால் செல்பவர்கள் வட்டுக்கோட்டை பொலிஸாரை கேவலமாக திட்டி விட்டு, எச்சில் உமிழ்ந்து விட்டு செல்வதை அங்கு அவதானிக்க முடிந்தது.



# ஓரமாக சென்றோர் மீது பஸ் மோதியதில் மூவருக்கு காயம்

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - மாதம்பை பிரதேசத்தில் வீதியோரத்தில் பயணித்த சிறுமி உட்பட பெண்கள் மூவர் மீது பஸ் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் ஒஒன்று செவ்வாய்க்கிழமை (20) இடம்பெற்றுள்ளது.

புத்தளத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த குறித்த தனியார் பஸ், மாதம்பை பழைய நகரில் மற்றுமொரு பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்டபோது 3 மோட்டார் சைக்கிள்களுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த சிறுமி உட்பட பெண்கள் மூவரும் சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் மாதம்பை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன்,

வயோதிப பெண் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து சம்வத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி மற்றும் நடத்துனர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மாதம்பை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் குறித்த விபத்தால், சிலாபம் - கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# அலெக்ஸின் நண்பருக்கு பிணை

■ எம்.றொசாந்த்

திருட்டுச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேக நபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


விளக்கமறியலில் வைக்கப்பட்ட கைதி உயிரிழந்த நிலையில், குறித்த வழக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை (21) விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்த உயிரிழந்தவருடன் கைதாகி தடுத்து வைக்கப்பட்டவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கை வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடமிருந்து மாற்றப்பட வேண்டும் என்ற சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வழக்கில் சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி சுகாஸ் உள்ளிட்ட பலரும் ஆஜராகியிருந்துள்ளதுடன், திருட்டு சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸாரினால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன.

# மட்டக்களப்பில் டெங்கு சோதனை ஆரம்பம்



■ வ.சக்தி

கிழக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சுகாதார அமைச்சினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக டெங்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

டெங்கு நோய் பரவும் மாவட்டங்களில் கிழக்கு மாகாணத்தில் முதன்மையாக காணப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பேரில் மட்டக்களப்பு நகரில் விசேட டெங்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணனின் தலைமையில் இந்த விசேட டெங்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எஸ்.சிவலிங்கம் மாநகர சபை ஊழியர்கள் பொதுச் சுகாதார பரிசோதவர்கள் என பலரும் இந்த விசேட டெங்கு பரிசோதனை நடவடிக்கைகளில் கலந்து கொண்டுள்ளனர்.

அரச ஊழியர்களை பாதுகாக்கும் வகையிலும் காரியாலயங்களுக்கு வரும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும், இந்த விசேட திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# தவறி விழுந்த பெண் உயிரிழப்பு

■ ரஸீன் ரஸ்மின்



கொழும்பில் இருந்து சிலாபம் நோக்கி இ.போ.ச பஸ்ஸின் மிதி பலகையில் இருந்து பயணித்த தம்பதியினர் தவறி கீழே விழுந்ததில் பெண் ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த ஆண் மேலதிக சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சீதுவை - அம்பலன்முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து, கொழும்பு - சிலாபம் வீதியில் தண்டுகம விமானப்படை வீதித் தடைக்கு அருகில் திங்கட்கிழமை (20) இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

PickMe

# யாழில் பிக் மீ சாரதி மீது தாக்குதல்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் பிக் மீ சாரதி ஒருவர் மீது தரிப்பிட முச்சக்கரவண்டி சாரதிகள் அச்சுறுத்தல் விடுத்து தாக்குதல் நடத்தியமை தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.


சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்வதற்காக சென்றபோது பொலிஸாரும், அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நடந்துகொண்டதாக பாதிக்கப்பட்ட பிக் மீ சாரதி கவலை வெளியிட்டுள்ளதுடன், பிக் மீ நிறுவனத்துக்கும் தகவலளித்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த நிறுவனம் சம்பவம் தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளதையடுத்து, சாரதியை யாழ். பொலிஸ் நிலையத்திற்கு திங்கட்கிழமை (20) அழைக்கப்பட்டு முறைப்பாடு பெறப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஸ்ரீ சத்திய சாயிபாபாவின்

# 98ஆவது ஜெயந்தி தினம்



பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 98ஆவது ஜெயந்தி தினம் நாளை வியாழக்கிழமை 23ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு உலகெங்கிலுமுள்ள ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பக்தர்கள் பல நிகழ்வுகளில் ஒன்று கூடி வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்கள்.

பாபாவின் சர்வ தர்ம கொள்கையின் சாரம் உலகில் அழியா முத்திரை பதித்துள்ளது. ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் தன்னலமற்ற மனிதாபிமான இந்த முயற்சிகள் அவரது மங்காப்புகழுக்குச் சான்றாக விளங்குகிறன. பாபாவின் ஜெயந்தி தின விசேட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

* கொழும்பு- 7 , இல 22 பார்ன்ஸ்பிளேஸ், சாய்மந்திர் - காலை 5:30 முதல் 8:30 வரை

* கொழும்பு- 6 இல 23 ருத்ராமாவத்தை சிவானந்தநிலையம் - சைவ மங்கையர் வித்தியாலயம்- காலை 5 மணி முதல் 6 மணிவரை மற்றும் காலை 10:30 முதல் 12 மணிவரை

* கொழும்பு-6 இல 40 ராமகிருஷ்ண வீதி, ராமகிருஷ்ணமிஷன் - மாலை 5:30 முதல் இரவு 8:30 வரை

இந் நிகழ்வுகளில் பஜனை, நகரசங்கீர்த்தனம், இசை, நடனம் மற்றும் நாடக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

# கார்த்திகை வாசம் இன்று ஆரம்பம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் கார்த்திகை வாசம் என்ற பெயரில் நடத்தி வரும் மலர் கண்காட்சி இம்முறையும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் (கிட்டு பூங்கா) நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி நடைபெறும் மலர் மற்றும் காட்சித்திடலானது இன்று புதன்கிழமை (22) பிற்பகல் 2.30 மணிக்கு சங்கிலியன் பூங்காவில் (கிட்டுப் பூங்கா) திறந்துவைக்கப்படவுள்ளது.

கௌரி முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இத்தொடக்க நிகழ்ச்சியில், சிறப்புரைஞர்களாக வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சமூக அரசியற் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

**“ தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு, நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இன்று புதன்கிழமை (22) மலர் கண்காட்சி திறந்து வைக்கப்படவுள்ளதுடன், இக்கண்காட்சியைப் பார்வையிடவரும் மாணவர்களுக்கு வழமை போன்று இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது**

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் இக்கண்காட்சி இம்மாதம் 30ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் முன்னிரவு 7.00 மணி வரை நடைபெறவுள்ளது.

கண்காட்சியைப் பார்வையிடவரும் மாணவர்களுக்கு வழமை போன்று இம்முறையும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பரதத்தை இழிவுபடுத்தியதை எதிர்த்து போராட்டம்

■ எம்.றொசாந்த்

பரதநாட்டியத்தையும், அதை பயிற்சி செய்பவர்களையும் இழிவுபடுத்தும் விதமாக கருத்து தெரிவித்த இஸ்லாமிய மதகுரு அப்துல் ஹமீட்க்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரி அரាលி பகுதியில் செவ்வாய்க்கிழமை (21) போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் - அராலி பகுதியை சேர்ந்த பரதம் கற்கும் மாணவ, மாணவிகளும் அவர்களின் பெற்றோர்களும் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். குறித்த போராட்டத்தில் உருத்திர சேனை மற்றும் சிவசேனையை சேர்ந்தோரும் பங்கேற்றுள்ளனர்.



# தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்

எந்தவொரு குற்றத்துக்காகவும் ஏனைய படைப்பிரிவினால் கைது செய்யப்படும் நபர்கள், பொலிஸாரிடமே ஒப்படைக்கப்படுவார்கள். சட்டம் மற்றும் ஒழுங்கை பேணும் பொலிஸார், சந்தேகநபர்களுக்கு எதிராக நீதிமன்றங்களின் ஊடாக நீதி, நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பர்.

நாட்டில் இடம்பெறும் சம்பவங்களை பொதுவாக நோக்குமிடத்து, சட்டத்தை தங்களுடைய கையிலெடுத்து, தண்டனையும் வழங்கி, ஏன்? மரணத்தைக்கூட விளைவித்து விடுகின்றனர். அந்தளவுக்கு சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து இருக்கின்றது.

நாட்டில் பொலிஸ் மா அதிபர் ஒருவர் இல்லையென எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன நிலையில், தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரட்னவின் பதவிக்காலம், அரசியலமைப்பு பேரவையின் அனுமதியின்றி மூன்று வாரங்களுக்கு ஒரு தடவை நீடிக்கப்பட்டு வருகின்றது. ஆகையால், சட்டம், ஒழுங்கு இல்லாத நாடாகவே பார்க்க வேண்டியிருக்கின்றது.

களவெடுத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், வட்டுக்கோட்டை பொலிஸாரால் இருவர், நவம்பர் 8ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டனர், அவ்விருவரில் வட்டுக்கோட்டை- சித்தங்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த 25 வயதான நாகராசா அலெக்ஸ், ஞாயிற்றுக்கிழமை (19) உயிரிழந்தார்.

கைது செய்யப்பட்ட அவ்விருவரும் நான்கு நாட்களாகத் தடுத்து வைக்கப்படவும் இல்லை விடுவிக்கப்படவும் இல்லை. இதனிடையே, மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டனர். அதன்பின்னர், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் நாகராசா அலெக்ஸ் மரணமடைந்தார். இவரது மரணம், இயற்கை மரணமல்ல என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், தன்னை, பொலிஸார் கட்டிவைத்து தலைகீழாகத் தொங்கவிட்டுத் தாக்கினர் என்றும் சாப்பாடு கொடுக்காமல், மதுவை அருந்த கொடுத்து சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தினர் என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்டவை பொய்யெனில், அந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர்களில் இருவருக்கு இடமாற்றம் வழங்கியது ஏன்? மூன்று உயர் அதிகாரிகள் அடங்கிய விசாரணைக் குழுவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள ஜெனரத் தெரிவித்துள்ளமை எதற்கு என்ற சந்தேகங்கள் எழும்புகின்றன.

நாடளாவிய ரீதியிலுள்ள பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நபர்களில் பலர், பொலிஸ் சிறையிலேயே உயிரிழந்துள்ளனர். வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில், பொலிஸ் உள்ளிட்ட படையினரின் கைகள், பொதுமக்களுக்கு எதிராக ஓங்கியே இருக்கின்றன.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் போது பொலிஸாரின் தாக்குதல்களுக்கு உள்ளாக்கி உயிரிழந்த முதல் சம்பவம், சித்தங்கேணியில் இடம்பெற்ற சம்பவம் அல்ல என்பதுடன் இதுவே இறுதி சம்பவமாகவும் இருக்காது.

ஏனெனில், சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொலிஸார், நீதியைக் கையிலெடுத்து தங்களுக்கு ஏற்றாற்போல பயன்படுத்திவருகின்றனர். ஆகையால், படுகொலைச் செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞனின் மரணத்துக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அது தாமதிக்கப்படுமாயின், "தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்" என்பதே உண்மை.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய்விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால், எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழ வேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.

தேவையற்ற நினைகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுமே முழுமையாகாது. நிஜவாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

நன்றி -பருத்தியூர் பால. வயிரவநாதன்

# பொருளாதாரத்தை அழித்து குற்றவாளிகளாகியும் தண்டிக்கப்படாதவர்கள்



எம்.எஸ்.எம். ஐயூப்

ஜனாதிபதியாக இருப்பவர்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற கருத்து 1978 ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது முதல் நிலவி வந்தது. அக்கருத்து பிழையானது என்பது அண்மைக் காலத்தில் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சில தீர்ப்புக்கள் மூலம் தெரிய வருகிறது.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் செய்த சில நடவடிக்கைகளுக்கு அவர் குற்றவாளி என உயர் நீதிமன்றம் அவரது பதவிக் காலத்துக்குப் பின்னர் வோடர்ஸ் எஜ் வழக்கின் தீர்ப்பில் குறிப்பிட்டு இருந்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவை பதவி நீக்கம் செய்து மஹிந்த ராஜபக்ஷவை அப்பதவியில் அமர்த்தியமை சட்டவிரோதமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலைத் தடுக்க தவறிவிட்டார் என்ற அடிப்படையிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றவாளி என தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்காக அவர் நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கட்டளையிட்டது.

இப்போது நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதியும் பொறுப்பாளி என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. கடந்த 14ஆம் திகதி வழங்கப்பட்ட அத்தீர்ப்பின் மூலம் ஜனாதிபதி கோட்டாபய மட்டுமன்றி நிதி அமைச்சர்களாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மற்றும் பசில், ஜனாதிபதியின் செயலாளராக இருந்த பி.பி.ஜயசுந்தர, மத்திய வங்கி ஆளுநர்களாக இருந்த அஜித் நிவாட் கப்ரால் மற்றும் டபிள்யூ டி. லக்ஷ்மன, திறைசேரி செயலாளராக இருந்த எஸ்.ஆர்.ஆட்டிகல மற்றும் மத்திய வங்கியின் நிதிச்சபையின் உறுப்பினர்கள் ஆகியோர் குற்றவாளிகள் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பல்கலைகழக கல்விமான்களான கலாநிதி அத்துலசிறி சமரகோன், கலாநிதி மஹிம் மெண்டிஸ் மற்றும் சூசையப்பு நேவிஸ் மொராயஸ், நீச்சல் வீரர் மற்றும் நீச்சல் பயிற்றுவிப்பாளர் ஜூலியன் போலிங் இலங்கை வர்த்தக சங்கத்தின் முன்னாள் தவிசாளர் சந்திரா ஜயரத்ன, டினான்பெரன்ஸி இண்டர்நஷ்னல் அமைப்பு மற்றும் ஜெஹான் கணகரத்ன ஆகியோரே இந்த மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனெக்க அலுவிஹாரே, விஜித் மலல்கொட மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகியோரே இந்த வழக்கை விசாரித்து தீர்ப்பை வழங்கியுள்ளனர். மேற்படி நபர்களின் நடவடிக்கைகளால் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அத்தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் இவ்விடயத்தில் அடிப்படை உரிமை மீறல் எதுவும் இடம்பெறவில்லை என நீதியரசர் குழாமில் இருந்த நீதியரசர் பிரியந்த ஜயவர்தன மட்டும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பெரும்பான்மை தீர்ப்பு என்ற வகையில் மேற்படி பிரதிவாதிகள் குற்றவாளிகள் என உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. ஆயினும் மனுதாரர்கள் நட்டஈடு எதுவும் கோராததால் தாம் பிரதிவாதிகளுக்கு நட்டஈடு எதுவும் விதிப்பதில்லை என்று பிரதம நீதியரசர் கூறியிருந்தார். ஆனால், அவர்கள் மனுதாரர்களுக்கு சட்டச் செலவாக 150,000 ரூபாய் வீதம் வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியிருந்தது.

பிரதிவாதிகளின் தவறான நடவடிக்கைகளால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கும் நிலையில், தாம் தமக்கு மட்டும் நட்டஈடு கோருவது நாகரிகமான செயலாகாது என்று நினைத்து மனுதாரர்கள் நட்டஈடு கோராமல் விட்டுவிட்டார்களோ அல்லது அவர்கள் அதைப் பற்றிச் சிந்திக்கவே இல்லையோ தெரியாது.

என்ன காரணத்துக்காக அவர்கள் பிரதிவாதிகளுக்காக குறிப்பிட்டோர் தண்டனையைக் கோராமல் இருந்தாலும் தண்டனை எதுவும் விதிக்கப்படாததால் தீர்ப்பின் பாரதூரதன்மை நாடு புரிந்து கொள்ளவில்லைப் போல் தான் தெரிகிறது. முன்னாள் ஜனாதிபதிகள் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்குச் சிறை தண்டனை விதிக்கப்பட்டோ அல்லது அவர்களது குடியியல் உரிமை இரத்துச் செய்யப்பட்டோ இருந்தால் அது சர்வதேச ரீதியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும்.

இது ஒரு அடிப்படை உரிமை மீறல் வழக்காகும். அடிப்படை உரிமை மீறல் வழக்குகளில் குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்குச் சிறை தண்டனையோ குடியியல் உரிமை இரத்துச் செய்தலோ விதிப்பதை நாம் ஒருபோதும் கேட்டதில்லை. அநேகமாக நட்டஈடே தண்டனையாக விதிக்கப்படுகிறது.

ஆனால், இது சிறை தண்டனையை விட குற்றவாளிகளின் குடியியல் உரிமையை இரத்துச் செய்யவேண்டிய விடயமாகும். பிரதிவாதிகளின் நடவடிக்கைகளால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது என்பதே மனுதாரர்களின் வாதமாகியது. அது உண்மையாகும். வழக்கின் தீர்ப்பில் பிரதிவாதிகளின் நடவடிக்கைகள் எவ்வாறு பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்தது என்பது விளக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய, 2019இல் பதவிக்கு வந்த உடன் பல்வேறு வரிச் சலுகைகளை அறிவித்தார். அச்சலுகைகளைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளவில்லை. பெரும் வர்த்தகர்கள் மற்றும் தொழிலதிபர்கள் ஆகியோருக்கே அச்சலுகைகளை வழங்கப்பட்டன. அவற்றின் மூலம் நாடு முன்னேறும், பொதுமக்கள் நன்மையடைவர் என்றே கூறப்பட்டது. ஆனால், மக்கள் அவ்வாறு நன்மையடையவில்லை. மாறாக திறைசேரி வருடத்துக்கு 68,000 கோடி ரூபாவை இழந்தது. இது நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாக பாதித்தது என்ற வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

அதேவேளை, 2021இல் அமெரிக்க டொலரின் பெறுமதியை 203 ரூபாவாக செயற்கையாக வைத்துக் கொள்ள மத்திய வங்கி நடவடிக்கை எடுத்தமை பொருளாதார நெருக்கடிக்கு மற்றொரு காரணம் என்ற மனுதாரர்களின் வாதத்தையும் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

நாம் அதனை எவ்வாறு விளங்கிக் கொள்வதென்றால் 2021இல் ரூபாவின் பெறுமதி வேகமாக வீழ்ச்சியுறும் நிலை ஏற்பட்டது. சந்தையில் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டமையே அதற்குக் காரணமாகும். எனவே, மத்திய வங்கி இலங்கை நாணயத்தின் பெறுமதியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக தம்மிடமிருந்த டொலரில் பெரும் பகுதியைச் சந்தையில் அள்ளிக் கொட்டியது. அதன் மூலம் சில மாதங்களாக டொலரின் பெறுமதியை 203 ரூபாவாக தக்கவைத்துக் கொள்ள முடிந்தது. ஆனால், தொடர்ந்து அதனை செய்ய மத்திய வங்கியில் டொலர் இருக்கவில்லை. இறுதியில் மத்திய வங்கியின் டொலரும் முடிவடைந்து ரூபாவின் பெறுமதியும் மீண்டும் சரிய ஆரம்பித்தது.

நாட்டில் வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடி ஏற்படும் அபாயம் இருந்தால் சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோருவதே அதனை சமாளிக்க இருக்கும் ஒரு வழியாகும். ஆனால், பல நிபுணர்கள் இதனை சுட்டிக் காட்டியும் கோட்டாவின் அரசாங்கம் உரிய நேரத்தில் நாணய நிதியத்திடம் செல்லவில்லை என்பதே மனுதாரர்களின் மற்றொரு குற்றச்சாட்டாகும். அரசாங்கம் கடந்த வருடமே நாணய நிதியத்திடம் உதவி கோரியது. அதனையும் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

இவ்வாறு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் மக்களின் அடிப்படை உரிமைகளை இழந்தனர். உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. எரிபொருள், எரிவாயுவுக்காக நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருந்தனர். எரிபொருள் தட்டுப்பாட்டால் போக்குவரத்து வசதியில்லாமல் பல நோயாளர்கள் மருத்துவமனைகளுக்குச் செல்ல முடியாமல் வீடுகளிலேயே உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் தொழில்களை இழந்தனர். மேலும், பலரது சம்பளம் குறைக்கப்பட்டது. விலைவாசி மும்மடங்காக உயர்ந்தது. எனவே, கிடைத்த வருமானத்தின் உண்மையான பெறுமதியும் வெகுவாக குறைந்தது. வீடு கட்டவும் வாகனம் விலைக்கு வாங்கவும் கல்விக்காக வெளிநாடு செல்லவும் உள்நாட்டிலேயே உயர் கல்வியைப் பெறவும் கனவு கண்டோரின் கனவுகள் சிதறடிக்கப்பட்டன. மூன்று நேரம் சாப்பிட்டவர்கள் இரண்டு நேரம் சாப்பிட நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனால் நாட்டில் முன்னொரு போதும் இல்லாதவாறு போஷாக்கின்மை பரவியது. கியூ வரிசைகளை ஒழித்தோம் என்று அரசாங்கம் மார்த்தட்டிக் கொண்டாலும் இந்த நிலைமைகள் இன்னமும் மாறவில்லை.

இந்த நிலைமையை உருவாக்கியவர்கள் தண்டிக்கப்பட வேண்டாமா? தண்டிப்பதற்குப் பதிலாக அவர்களுக்குச் சலுகைகளை வழங்க அரசாங்கம் இன்னமும் கோடிக்கணக்கில் பொதுப் பணத்தைச் செலவிடுகிறது. இந்த வழக்கில் அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டாலும் தண்டனை எதுவும் விதிக்கப்படவில்லை.

அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார் என்றும் ஊழலில் ஈடுபட்டார் என்றும் 1980ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமை இருத்துச் செய்யப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலைத் தடுக்கத் தவறியதற்காக ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபாலவுக்கு பத்து கோடி ரூபாய் நட்டஈடு விதிக்கப்பட்டது. முறைகேடாகக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தைத் தனியாருக்கு விற்றமைக்காக நிதி அமைச்சின் செயலாளராக இருந்த பி.பி.ஜயசுந்தரவுக்கு அரசதுறை தொழில்கள் தடைசெய்யப்பட்டன. இலஞ்சம் வழங்க முற்பட்டார் என்று முன்னாள் எம்.பி மயோன் முஸ்தபாவின் குடியியல் உரிமை இரத்துச் செய்யப்பட்டது.

எனினும் நாட்டில் இலட்சக்கணக்கானவர்களின் வாழ்க்கையையே அதள பாதாளத்தில் இழுத்துத் தள்ளியவர்கள் குற்றவாளிகளாக காணப்பட்டாலும் தண்டிக்கப்படவில்லை. கள் மீண்டும் அரசியலிலும் அரச சேவையிலும் சேராத வகையில் தண்டிக்கப்பட் வேண்டியவர்களாவர். குடியியல் உரிமையை இரத்துச் செய்வதே அதற்கு சிறந்த வழியாகும்.

## கடிதங்கள்

### வட்டுவாகல் பாலத்தை பாருங்கள்

முல்லைத்தீவு நகரத்திற்கான பிரதான பாதைகளில் ஒன்றாகக் காணப்படுகின்ற ஏ-35 ரக வீதியின் வட்டுவாகல் பாலமானது எந்தவித புனரமைப்புக்களுமின்றி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு சேதமடைந்துள்ள பாலத்தில் உடைவுகள் ஏற்படும்போது தற்காலிக புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றதே தவிர நிரந்தர புனரமைப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது பாலத்தின் மையப்பகுதியில் பாரிய உடைவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் பாரிய குழியும் காணப்படுகின்றது.

மேலும், பாலத்தில் பல்வேறு இடங்களில் வெடிப்புக்களும் வீதி பாதுகாப்பு அற்றதாகவும் வீதியில் சில இடங்களில் தாழிறங்கியும் காணப்படுகிறது.

தற்போது மழையுடன் கூடிய காலநிலையால் நீர்மட்டம் உயர்ந்து பாலத்தை மேவி செல்வதோடு, இதன் ஊடாக கனரக வாகனங்களும் செல்லும்போது மேலும் உடைவு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அவ்விடத்தில் விபத்துகள் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகளும், ஆபத்தான முறையில் பிரயாணிகள் பயணம் செய்யவேண்டிய நிலையும் காணப்படுகிறது. இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலதடவைகள் எடுத்துக் கூறியும் புனரமைப்பு பணிகள் எவையும் நடைபெறவில்லை. எனவே குறித்த பாலத்தினை சீரமைத்து தரும்படி அப்பாலத்தினூடாக பயணிக்கும் பயணிகள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சண்முகன் தவசீலன்



# அறிவாராய்ச்சியியல்

# Epistemology




**துன்பமான சம்பவங்கள், சில இயற்கையான நிகழ்வுகளே, இதனை யதார்த்தமாகப் புரிந்துகொள்ளும் பக்குவத்தினை, நாம் தான் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்**

**துன்பமான சம்பவங்கள், சில இயற்கையான நிகழ்வுகளே, இதனை யதார்த்தமாகப் புரிந்துகொள்ளும் பக்குவத்தினை, நாம் தான் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்**

**துன்பமான சம்பவங்கள், சில இயற்கையான நிகழ்வுகளே, இதனை யதார்த்தமாகப் புரிந்துகொள்ளும் பக்குவத்தினை, நாம் தான் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்**

முகமது நிஜாம் ஆஃப்ரீன்
தத்துவவியல் துறை
பேராதனை பல்கலைக்கழகம்
(நான்காம் வருடம்)
(செவ்வாய்க்கிழமை தொடர்ச்சி)


டேக்கார்ட்டினது கருத்திலிருந்து மனிதனோடு உடன் பிறந்ததாக எண்ணப்படுகின்ற அறிவியளது தன்மையை மறுத்து, (எண்ணங்கள் புலன்கள் வாயிலாக பெறப்படுகின்றன என்ற கருத்தினைக் கூறினார்) மனிதனது மனத்தை வெள்ளைக் கடதாசிக்கு ஒப்பிடுகின்றார். மனித மனம் அவன் பிறக்கும் போது வெற்றுக்கு ஒப்பாக இருக்கிறது. மனிதன் அனுபவங்களைப் பெறும்போது அதில் பதிவு செய்கின்றான் என்றார். எனவே, அனுபவத்திற்கு முந்தியதாக எதுவும் மனதில் இல்லை.


மேலும், புலன்களால் பெறப்படுபவை எளிய எண்ணங்கள், இவற்றைத் தொடர்புபடுத்துவதன் மூலம் சிக்கலான எண்ணங்கள் பெறப்படுகின்றன. எனவே, மனித அறிவின் வேறுபட்ட துறைகள் சிக்கலான எண்ணங்கள் யாவும் எளிய எண்ணங்களைத் தொடர்புபடுத்தி பெறப்பட்ட என்பது இவர் கருத்து. லொக்கின் இக்கருத்துக்கள் அறிவொளிக்காலத்திற்கு ஆரம்ப வித்துகளாக அமைந்தன. மேற்கூறிய கருத்தை இன்னும் தெளிவாகக் கூறுவதனால் மனித மனம் என்பது புதிதாகப் பிறந்த குழந்தையை, எதுவும் எழுதப் பெறாத ஒரு வெற்றுக் கடதாசியைப் போன்றதாகும். பின்னர் இவற்றில் இந்த பரந்த உலகினூடாக அவன் பெற்றுள்ள எண்ணங்களைத் தமது அனுபவம் மூலம் கண்டு பதிய வைக்கிறான். அதன் பின்னர், அனுபவம் விரிவடைந்து அவனது சிந்தனைக்குத் தேவையான அறிவுகளைப் பெறுகின்றது. எனவே, அதிலிருந்து தான் ஏனைய புலனுணர்வுகள், எண்ணங்கள் எழுவதாகக் குறிப்பிடுகின்றான். இவற்றினைக் கொண்டே புறப்பொருட்களின் உண்மையை உணர்கின்றான். உண்மையான தூண்டப்படும் போது புலனறிவுகள் தோன்றுகின்றன. இவை பொருட்கள் எண்ணங்களைப் பிறப்பிக்கின்றன. எண்ணங்கள் பற்றிய அறிவினை மனிதன் புலனுணர்ச்சிகள், ஆழ்ந்த எண்ணங்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடிகின்றது. சிந்தனைக்குத் தேவையான அனைத்தினையும் அதன் கருவிகளையும் கூட அனுபவம் தருகின்றது. ஒரு பொருளைப் பற்றிய பல விதமான கருத்துக்களை எமது புலனுணர்வுகளே அளிக்கின்றன. சுருக்கக் கூறின், கருத்துக்களின் பிறப்பிடம் புலனுணர்வுகளாகும். எண்ணங்கள் அனுபவத்திலிருந்து பெறப்பட்டு உள்ளத்தில் பதிவுகளாகின்றன. என்றும் அவை எமது அறிவுக்கு அடிப்படையாகவும், மூலமாகவும் உள்ளன என்றும் அறிவிக்கிறார். மேற்கூறிய வழிகளில் கிடைக்கப்பெறும் எண்ணங்கள் எளிமையாகவும், எளிய எண்ணங்கள் பல கூட்டுச் சேர்ந்து உருவாக்கப்பட்டு விடுகின்ற கூட்டு அல்லது சிக்கலுடையதாகவும் ஏற்பட்டு விடுகின்றன என எண்ணங்களைப் பிரித்தும் விளக்குகின்றார்.

எமது அறிவின் இயற்கைத் தன்மை, அதனது பண்பு, பரப்பு, எல்லைகள் என்பதையிட்டு அறியப்படும் போது எண்ணங்கள் சிலவற்றில் எளிமையும், சிலவற்றில் சிக்கல் தன்மையும் காணப்படுவதாகவுள்ளது. நிறம், வடிவம், அளவு, திண்மை, இயக்கம் ஆகியவற்றையும் இவை போன்றவை புலன்களின் வாயிலாக முதலில் மனதில் பதிகின்றன. இவ்விதம் பதிவாகும் எண்ணங்கள் எளிய எண்ணங்களாக, கலப்பற்றதாக இருக்கும். உதாரணமாக நிறம், ஒளி, சுவை, நாற்றம் என்பன போன்ற எண்ணங்களைக் குறிப்பிடலாம். அடுத்து, ஒன்றுக்கு மேற்பட்ட புறப்புலன்கள் மூலம் கிடைக்கக்கூடியதாக சில எண்ணங்கள் உள்ளன. அவை பார்த்தால், தொடுதல் போன்ற உணர்வுகளால் கிடைப்பவை எனலாம். இவை பரப்பு, உருவம், இயக்கம் பற்றிய எண்ணங்களாகும். புறப்பொருட்களில் ஏற்படும் உடனடி அனுபவங்களால், புலனுணர்ச்சியால் உருவாக்கப்படும் தனிநிலையான அல்லது எளிய எண்ணங்களே இத்தகையதாகும்.

வெற்று நிலையாக உள்ள மனதில் ஏற்படும் எளிய எண்ணங்கள் பலவற்றின் தொடர்பாக கூற்று அல்லது சிக்கல் தன்மை வாய்ந்த எண்ணங்கள் ஏற்பட்டு விடுகின்றன. இது வெளிப்புற பொருட்களிலிருந்தும் தமது எண்ணத்திலும் இவ்விதம் ஒன்று பட்டு எண்ணங்களை உருவாக்குதல் மனிதன் தொழிற்பாடாக உள்ளது. இச்சிக்கலான எண்ணங்கள் யாவும் எளிய எண்ணங்களால் உருவாக்கப்பட்டதேயன்றி தனித்து


பாரன்ட் கிரேட்


இம்மானுவேல் கான்ட்


காட்ஃபிரைட் நில்லர்

சிக்கலாகத் தோன்றுவதில்லை. எடுத்துக்காட்டாக அழகு, பிரபஞ்சம், மனிதன் என்பன பல்வேறு எளிய எண்ணங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஓர் எண்ணமாகும். இதில் சிக்கல் தன்மை. கூட்டான தன்மை காணப்படுவதால் அவ்விதமான எண்ணங்களாகத் தோன்றுகின்றன. இங்கனமாக எண்ணங்கள் மாறு நிலையுடையதாகவும், பொருட்களைப் பற்றி அதனைத் தாங்கியதாகவும், ஒன்றுக் கொன்று தொடர்புபட்ட உறவு நிலைகளைக் கொண்டதாகவும் இருக்கும் என்றார் லொக் எண்ணங்கள் பலவற்றை ஒருவன் அனுபவிக்கின்ற போது சிக்கலான எண்ணம் தோன்றுகின்றது. எடுத்துக்காட்டாக /பெரிய நீண்ட திண்மையான கறுப்பு நிற மேசை என்ற கருத்து சிக்கலானதாகும். மனதின் தொழிற்பாடு இன்றி நேரடியாகப் புலன்கள் வாயிலாகப் பெறுகின்ற எளிய எண்ணங்கள் உண்மையாக இருக்கின்றன. இவற்றைப் போன்று சிக்கலான எண்ணங்கள் இருக்காது. புறப்பொருள்கள் குறித்து நாம் பெறும் அறிவு சிக்கலான எண்ணங்களால் பிழையுடையதாகலாம் எனக் கருதுகிறார். ஆக, எளிய எண்ணங்கள் உண்மைப் பொருள் பற்றிய அறிவினைத் தருகின்றன என்கிறார்.

இங்கனம் கருத்துக்களில் காணும் சிக்கல் நிலையையும் எளிமையையும் பாகுபடுத்தி லொக் அவைகள் யாவும் எமது புலனுணர்ச்சிகள், ஆழ்ந்த எண்ணுதல் என்பவற்றால் பெறப்படுகின்றன. எனினும், பொருட்களில் காணும், காணப்படுகின்ற சில குறிப்பிட்ட பண்புகளினாலும் கிடைக்கப் பெறுகிறது என்கிறார். எமது உள்ளத்தில் ஏற்படுத்தப்படும் எந்த எண்ணங்களையும் உற்பத்தி செய்யக் கூடியதான சக்திகளை பொருட்கள் தம்மில் கொண்டுள்ளன. இவை பொருட்களுக்கே உரித்தான பண்புகள், தரம் (Qualities) அல்லது தன்மையாகும். இது பொருளின் திறமையெனக் கொள்கிறார். இங்கனமான பண்புகள் சில பொருட்களின் அமைப்பிலேயே உள்ளவையாக உள்ளன. பொருட்களில் தங்கியிருக்கும் இப்பண்பினை அவற்றிலிருந்து பிரிக்க முடியாத இப்பண்பினை முதல் நிலை அல்லது மூலப்பண்புகளான பரப்பு, உருவம், இயக்கம் அல்லது இயக்கமின்மை என்பனவற்றை அதன் அமைப்பின் பண்பிலிருந்து பிரிக்க முடியாது. உதாரணமாக, பொதுமையைக் கூறுகின்றார். தானியம் இரண்டு துண்டுகளாக்கப்பட்டாலும், ஆலையில் அரைத்தாலும் பல அதன் பண்பு இருக்கும். இம்முதல் நிலைப்பண்பானது தனித்த இருப்புடையதுவேயாகும். இதுவே ஆரம்ப அதன் அமைப்பில் அனுபவத்திற்கு அயலாக பண்பாகவுள்ளது. இப்பண்புகளைக் கொண்டு பொருள்களினது குணவியல்புகளையும் தன்மைகளையும் அனுபவித்து கொண்டு அதாவது, அப்பொருளை எமது புலன்கனால் கண்டு கொள்வது மூலம் பெறக்கூடியதாகவுள்ளது.

இவ்விதமான மூலப் பண்பிலிருந்து பலவித புலனுணர்வுகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். சுவை, மணம், ஒலி, நிறம் போன்ற உணர்வுகளைப் பெறலாம். இவை முதனிலைப் பண்புகளால் வழிநிலைப்பண்புகள் எழுப்பப்படக் கூடியவையாகும். இவற்றுக்கு (Secondary qualities) எனப் லொக் பெயரிடுகின்றார். இவ்வழிநிலைப்பண்பானது அகநிலையைச் சார்ந்திருப்பதால் புலன்களால் அறியக்கூயது என அனுபவிக்கும் அனுபவகருத்துக்கு முரண்பட்டதாக அமைகின்றது. உதாரணமாக ஒரு மெழுகுவர்த்தியின் தீச்சுடரை நாம் நோக்கும்போது, அது எமக்குத் தரும் அனுபவ கருத்தானது, அதனத் தீச்சுடரான முதனிலைப் பண்பேயாகும். அதனைத் தொட்டவுடன் எமக்கு சூடு என்ற உணர்ச்சி ஏற்படுகின்றது. இது முதனிலைப்பண்பினால் கிடைக்கப்பட்ட பொருட்களில் உள்ள வழிநிலைப்பண்புகள் என லொக் கூறுகிறார். இவை அக நிலையைச் சார்ந்தவையாயினும் எமக்குப் புலன்கள் மூலம் எண்ணங்கள் ஏற்படுத்தி மனதில் பதிய வைக்கின்றன. ஆக, பொருள் பற்றிய எண்ணத்தினை முதல் நிலை. வழி நிலைப்பண்புகளால் பெறக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு பொருட்களுக்கு ஆதாரமாக இருக்கும் பண்புகளையும், பொருட்களைச் சார்ந்து நிற்கும் பண்புகளையும் கொண்டு, புலனுர்ச்சிகள், ஆழ்ந்து எண்ணுதல் மூலம் பொருள் பற்றிய உண்மையை அறிய முடிகின்றது. அன்றில் எண்ணங்கள் என கூறக்கூடிய உண்மைப் பொருள் பற்றிய எமது அறிவு உடன்பிறந்தவையாகவோ ஏற்கென நம் மனதில் பதியப்பட்டவையாகவோ இல்லை, யாவும் எமது அனுபவம் மூலம் மேற்கூறப்பட்ட வழிகளில் பெறப்படுவதே ஆகும். ஆகையால்தான் டேக்கார்ட் கூறிய உடன்பிறந்த எண்ணங்களை குறையாடுடையதாகக் கூறுகிறார். இவ்வாறாக லொக், தம் காலத்தில் எழுந்த புலன்களுக்கு முன் அறிவு பெறப்படுகின்றது என்ற கொள்கைக்கு எதிராக அனுபவ வாதக் கொள்கைக்கு உளவியற் பாங்கான முறையில் எண்ணங்களின் ஏற்புடைமையைத் தீர்மானித்தது சிறப்புடையது எனலாம். லொக்கிற்குப் பின்னர் ஐரோப்பிய மெய்யியல் வாதிகளில் பார்க்லி அனுபவ கருத்துக்களை கூறுவதில் சிறப்பிடம் பெறுகிறார். அறிவைப் பற்றி லொக் ஏற்றுக் கொண்ட அடிப்படைக் கருத்துக்களைப் பயன்படுத்தி. சடக் கொள்கையையும், இறையியல் கொள்கைகளையும் பார்க்லி மறுத்தார். எமது உள்ளமானது வெற்றுப் பலகையைப் போன்றது. புறத்தே பொருள்கள் இயங்குகின்றன. அவற்றினது பண்புகள் எமக்குப் புலனுணர்வைத் தருகின்றன. ஆகையால், நாம் அதன் மூலம் சடப் பொருள்கள் பற்றிய அனுபவத்தைப் பெற்றுக் கொள்கிறோம் என்று லொக் உரைத்த கருத்தினை மறுப்பதிலும் பார்க்லி தனது கருதுகோளை அமைக்கிறார். எனவே, லொக்கினது உள ரீதியான தர்க்க முறையையும் ஏற்கிறார்.


அத்துடன், எண்ணங்கள் புலனுணர்ச்சியால் எழுபவை என்றும் கற்பனையால் எழுபவை என்றும் பிரித்து புலனுணர்ச்சியால் எழும் எண்ணங்கள் உள்ளத்தைச் சார்ந்துள்ளன என்றும், அவற்றுக்கு காரணமாகக் கடவுள் இருப்பு உள்ளது என்றும் கூறுகிறார். இவர் ஆன்மா பற்றியும், கடவுள் பற்றிய எண்ணக்கரு ஓர் அகக் காட்சி மூலம் பெறக்கூடியது எனவும் ஏற்றுக் கொள்கிறார். புறப்புலக்காட்சியையும் அகப்புலக்காட்சியையும் பார்க்லி வலியுறுத்தினார். லொக் கூறிய எண்ணங்கள் பற்றிய கருத்தினை அவர் புலனுணர்ச்சியால் எழுபவை, கற்பனையால் எழுபவை என இரண்டு வகையாகப் பிரிக்கிறார். கற்பனையில் எழும் எண்ணங்கள் எமது உள்ளத்தைச் சார்ந்தே உள்ளன. எமது உள்ளத்தோடு தொடர்புடையதாக உள்ளன. ஆனால், புலனுணர்ச்சியால் எழுபவை உள்ளத்திலிருந்து எழுபவையல்ல. அது எமக்கு அப்பாற்பட்ட ஒன்றால் உருவாக்கப்பட்டதே இவ்வாறு பார்க்லி எண்ணங்களைப் பற்றியும், எண்ணங்கள் புறப் பொருளால் உருவாக்கப்படுகின்றன என்றும் அவற்றுக்கு காரணம் கடவுள் என்றும் எண்ணங்கள் நாம் அறியாத பொது எல்லையற்ற அன்மாவின் உள்ளத்திலிருக்கின்றன. என்றும் ஏற்றுக்கொள்வதால் அவர் அக நிலைக் கொள்கையிலிருந்து புற நிலைக்கருத்துக் கொள்கையை வலியுறுத்தகிறார். ஆக, பார்க்லி அனுபவ வாதத்திற்குரிய அடிப்படைக் கருத்தில் ஒரு வகை சிக்கல் தன்மையை புரிய வைக்கிறார் எனலாம். எனினும் லொக்கை விட பரந்த முறையில் அனுபவ வாதக் கருத்தினை எடுத்தாள்வதும் அறியத்தக்கது.

லொக்கை அடுத்து, அனுபவத்துக்கு முழு உருவம் கொடுத்தவராக ஹியூம் அடையாளப்படுத்தப்படுகின்றார். இவரும் லொக்கின கோட்பாடைத் தழுவி உளவியல் பாங்கான முறையில் தெளிவான அறிவை அனுபவ வாதத்துக்கு அளிக்கிறார். மனிதனின் அறியும் ஆற்றல் பற்றிய ஆராய்ச்சியை லொக்கைப் போலவே ஹியூமும் கூறுகிறார். அனுபவ வழிக் கொள்கையை வலியுறுத்திய இவர் புலனுணர்ச்சி, ஆழ்ந்த எண்ணுதலால் பெறப்படும் விபரங்களையே எமது அறிவு சார்ந்துள்ளது என்றார். (லொக் பாவித்த உண்ணம் என்ற கருத்துக்கு பதிலாக ஹியூம் புலக்காட்சி அறிவு என அறிமுகப்படுத்துகிறார். புலக்காட்சியை, நாம் பெறும் எண்ணங்கள், உட்பகுதிகள் என வகுத்து உட்பகுதிகள் என கூறக்கூடியவைகள் எமது உள்ளத்தில் முதன் முறையாக எழுகின்ற புலனுணர்ச்சி, மனவெழுச்சிகள் போன்றவைகளாகும் என்கிறார். புறத்தே உள்ளவைகளிலிருந்து எமது உட்பகுதிகளாக சில புலனுணர்வுகள் கிடைக்கின்றன. அவை அகத்தில் பதியப்பட்டு எண்ணங்களாகின்றன என ஹியூம் கூறுகிறார். உட்பதிவுகள் புலன்களைத் தாக்கும்போது இன்பம், துன்பம், சூடு, குளிர்ச்சி போன்ற உணர்வுகளை அதாவது சூடு, குளிர், இன்பம், மென்மை போன்றவைகளைப் பற்றிய அறிவினைத் தருகிறது.

இங்கனமாகப் பெறப்படுபவை சிலவற்றுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. என காரண காரியத் தொடர்பை ஹியூம் அறிமுகப்படுத்துகிறார். காரணகாரிய முறையை எண்ணங்களின் இயைபாகக் கருதினார்.இத்தகைய காரண காரியம் பற்றிய அறிவும் அனுபவம் மூலமே பெறப்படுகின்றது என எடுத்துரைத்தார். அவற்றோடு, காரணகாரிய உறவு என கூறுவதில் அதனிடையே கட்டாயத் தொடர்பும் இன்றியமையாதது என்கிறார். இவ்வித காரண காரியம் பற்றிய அறிவினை எமது புலசார்பின்றி அறிய முடியாது. ஏனெனில் ஒரு பொருள் நிகழ்வதற்கு முன் அதனை அறிந்திருக்க வேண்டும். உதாரணமாக நெருப்பானது சுடும் நீர் குளிர்ச்சியானது என்பதை ஏற்கனவே அறியப்பட்டதாக இருக்க வேண்டும். இவற்றை நுகர்ச்சியால் அன்றி புலனுணர்ச்சியால் மாத்திரம் அறியமுடியாது என ஹியூம் வலியுறுத்திக்கின்றார். பொருள்கள் ஒன்றோடு ஒன்று கட்டாயமான உறவை புற உலகில் பெற்றிருக்கவில்லை. ஆனால், எண்ணங்களோ நம் உள்ளத்தில் இயைபு மீண்டும் நிகழ்தல் என்ற பழக்கத்தின் விளைவு ஆகும். இதில் நாம் பெற்றுகொள்வது சட்ட ரீதியான கட்டாயமன்று. ஆனால், அவை நுகர்ச்சியை அல்லது அனுபவத்தை அடிப்படையாக கொண்ட தர்க்க ரீதியான கட்டாயமே ஆகும் என்கிறார். மேலும் ஹியூம் சட பொருளை நாம் நேர்முகமாக அறியவில்லை என்றும் லொக் கூறியதை போல் சட பொருள் பண்பு கொண்டது என கருதுவதும் தவறானது என எண்ணினார். அதுபோல, எண்ணங்களை தாங்குவதற்காக கொல்லப்படுகின்ற ஆன்மாவை பற்றிய கருத்தையும் மறுக்கிறார். ஆன்ம என்பது எமது புலன்கள் பெறும் காட்சிகளின் கூட்டுத்தொகையாக உள்ளது. ஆன்மாவை பற்றிய கருத்தினை மறுத்தாலும் உளம் என்ற ஒன்றிருப்பதாக ஏற்றுக்கொள்கிறார். உளவியல் வளர்ச்சி மேலோங்குவதற்கு ஓரளவு ஹியூம்ன் முறை காரணமாக இருந்தது. இவ்விதம் லொக் இணை தொடர்ந்து வந்த அனுபவ வாதம் மேலும் தெளிவும் விரிவும் உடையதாக ஹியூம் வலியுறுத்திய கருத்தில் அறிய கூடியதாக உள்ளது. இருந்த போதும் ஹியூம், அறிவு பற்றி லொக் பார்க்லி ஆகியோர் கையாண்டதை விட ஓர் ஐயத்தன்மையை உருவாகிக்குறார்.மேலும் உடல் உளம் பற்றிய கருத்தினையும் கொண்டிருந்தபடியால் ஓர் இருமை வாதியாகவும் இணங்கப்படுகிறார்.

(முற்றும்)

# இந்தியாவின் தோல்வியால் இருவர் உயிர் துறந்தனர்



உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டத்தில், இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள், ஞாயிற்றுக்கிழமை (19) மோதின. இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தொடர் முழுவதும் தொடர்ச்சியாக வெற்றி பெற்று வந்த இந்தியா இறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததை, இந்திய கிரிக்கெட் ரசிகர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

பல ரசிகர்கள் கண்ணீர் விட்டு அழுதனர். இதற்கிடையே இரண்டு ரசிகர்கள் விபரீத முடிவை எடுத்துள்ளனர். ஒடிசா மாநிலம் ஜாஜ்பூர் பகுதியை சேர்ந்த தேவ் ராஜன் தாஸ் (23) என்ற ரசிகர் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

அதேபோல் மேற்கு வங்காள மாநிலம் பெங்குரா பகுதியை சேர்ந்த ராகுல் லோகர் (23) என்ற ரசிகரும் போட்டி முடிந்த அன்றிரவு தனது அறையில் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இந்தியாவின் தோல்வி இரண்டு இளம் உயிர்களை பறித்துள்ளது. ரசிகர்கள் விளையாட்டை விளையாட்டாக பார்க்க வேண்டும். விளையாட்டில் வெற்றியும் தோல்வியும் சகஜம் என்பதை ரசிகர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ராஜஸ்தான்

# விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன்



ராஜஸ்தான் மாநிலத்தில் வருகிற 25ஆம் திகதி சட்டசபை தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. பிரசாரத்திற்கு இன்னும் மூன்று நாட்கள் மட்டுமே உள்ள நிலையில், காங்கிரஸ் கட்சி தனது தேர்தல் அறிக்கையை செவ்வாய்க்கிழமை (21) வெளியிட்டுள்ளது.

தேர்தல் அறிக்கையில், "விவசாயிகளுக்கு 2 இலட்சம் ரூபாய் வட்டியில்லா கடன் வழங்கப்படும். சுவாமிநாதன் அறிக்கையின்படி, குறைந்தபட்ச ஆதார விலை வழங்கப்படும். காங்கிரஸ் 10 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும். அதில் 4 இலட்சம் வேலை அரசு செக்டாரில் ஏற்படுத்தப்படும். பஞ்சாயத்து அளவிலான ஆள்சேர்ப்பு திட்டம் கொண்டு வரப்படும். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும்.

ராஜஸ்தானின் பொருளாதாரம் இந்த ஆண்டு இறுதியில் 15 இலட்சம் கோடி ரூபாயாக இருக்கும். இதனை 2030-க்குள் 30 இலட்சம் கோடி ரூபாயாக உயர்த்துவதே இலக்கு" உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இடம் பிடித்துள்ளன.

இந்த விழாவில், காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராஜஸ்தான் மாநில முதல்வர் அசோக் கெலாட், மாநில காங்கிரஸ் தலைவர் கோவிந்த் சிங் தோதசரா, சச்சின் பைலட் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

உத்தரப்பிரதேசம்

# 'ரசகுல்லா' மோதலில் 6 பேர் காயம்

உத்தரப்பிரதேச மாநிலம் சம்ஷாபாத் பகுதியில் சில தினங்களுக்கு முன்பு திருமண நிகழ்வு ஒன்று நடைபெற்றுள்ளது.

உறவினர்கள், அப்பகுதி மக்கள் கலந்து கொண்ட இரவு உணவு விருந்தில் ரசகுல்லா உள்ளிட்ட பல்வேறு இனிப்பு வகைகள் பரிமாறப்பட்டன. அப்போது, ரசகுல்லா இனிப்பு தீர்ந்துவிட்டதால் திருமண நிகழ்ச்சிக்கு வந்திருந்த இரு தரப்பினருக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றி, கைகலப்பாக மாறி இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். இதில் 6 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து பொலிஸார், இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# "போர் நிறுத்த ஒப்பந்தத்தை நெருங்கி விட்டோம்"

இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்பினருக்கிடையில் போர் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் இரு தரப்பிலும் உயிர் சேதங்கள் அதிகரித்து வருகின்றது. இதற்கிடையே போரை நிறுத்தி காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்ய அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முன்வந்தன. ஆனால், பிணைக்கைதிகளை விடுவிக்கும் வரை போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால் மருத்துவமனைகள் செயல்படாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தீவிர சிகிச்சை பெற்று வந்தவர்கள் எகிப்து மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். மருத்துவமனையை ஹமாஸ் அமைப்பினர் தங்களது செயல்பாட்டிற்காக பயன்படுத்தி வந்தனர் என குற்றம்சாட்டி வரும் இஸ்ரேல் இராணுவம், மருத்துவமனைகளில் சோதனை நடத்தி வருகிறது. இரண்டு மூன்று சுரங்கங்கள் மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டுள்ளதை கண்டு பிடித்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளது.



இந் நிலையில், இஸ்ரேல் இராணுவத்துடன் போர் நிறுத்தம் ஒப்பந்தத்தை நெருங்கி விட்டோம் என ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே தெரிவித்துள்ளதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே "ஹமாஸ் அதிகாரிகள் இஸ்ரேல் இராணுவத்துடன் போர் நிறுத்தம் ஒப்பந்ததை நெருங்கி விட்டார்கள். அதிகாரிகள் தங்களது பதிலை கத்தார் மத்தியஸ்தர்களுக்கு அனுப்பியுள்ளது." எனத் தெரிவித்துள்ளார்.

ஏமன்

# "இஸ்ரேல் கப்பல்களே இலக்கு"

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே தொடர்ச்சியாக போர் நடைபெற்று வருகிறது. இந்த போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் படை ஆதரவு தெரிவித்துள்ளது. "செங்கடல் பகுதிக்கு இஸ்ரேலிய கப்பல்கள் மற்றும் அந்நாட்டு கொடிகளுடன் வரும் கப்பல்களை கடத்துவோம்" என அவர்கள் எச்சரிக்கை விடுத்து இருந்தனர்.

இந்நிலையில், துருக்கியில் இருந்து கேலக்சி லீடர் என்ற சரக்கு கப்பல் இந்தியா நோக்கி வந்து கொண்டிருந்தது. இதில் இஸ்ரேலியர்கள் உட்பட பல்வேறு நாட்டை சேர்ந்த 52 பணியாளர்கள் பயணம் செய்தனர். இந்த கப்பல் ஏமன் அருகே தெற்கு செங்கடல் பகுதிக்கு சென்றபோது திடீரென மாயமாகியுள்ளது.



அந்த சரக்கு கப்பலை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடத்தி சென்று விட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. மேலும் கப்பல் கடத்தப்பட்ட சம்பவத்துக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, "இஸ்ரேலின் கப்பல்கள் எங்களின் நியாயமான இலக்கு. அது எங்கிருந்தாலும், நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம்" என்று ஹவுதி அமைப்பின் இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணித் தலைவராக சூரியகுமார் யாதவ்




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான இந்திய அணியின் தலைவராக சூரியகுமார் யாதவ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல் மூன்று போட்டிகளில் ருத்துராஜ் கைகவாட் உப அணித்தலைவராகச் செயற்படவுள்ளதோடு, இறுதி இரண்டு போட்டிகளிலும் அப்போது குழாமில் இணையும் ஷ்ரேயாஸ் ஐயர் உப அணித்தலைவராகச் செயற்படவுள்ளார்.

இத்தொடரின் பயிற்சியாளராக இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவானான வி.வி.எஸ்.லக்ஸ்மன் செயற்படவுள்ளார்.

குழாம்: சூரியகுமார் யாதவ் (அணித்தலைவர்), ருத்துராஜ் கைகவாட் (உப அணித்தலைவர்), இஷன் கிஷன் (விக்கெட் காப்பாளர்), யஷஸ்வி ஜைஸ்வால், திலக் வர்மா, ஷ்ரேயாஸ் ஐயர் (இறுதி இரண்டு போட்டிகளுக்கு மட்டும்) (உப அணித்தலைவர்), ரிங்கு சிங், ஜிதேஷ் ஷர்மா, வொஷிங்டன் சுந்தர், அக்ஸர் பட்டேல், ஷிவம் டுபே, ரவி பிஷ்னோய், அர்ஷ்டீப் சிங், பிரசீத் கிருஷ்ணா, ஆவேஷ் கான், முகேஷ் குமார்.

பாகிஸ்தான்

# பந்துவீச்சு பயிற்சியாளர்களாக குல், அஜ்மல்



பாகிஸ்தானின் முன்னாள் வீரர்களான உமர் குல், சயீட் அஜ்மல் ஆகியோரை அந்நாட்டு ஆண்கள் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர்களாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமித்துள்ளது.

வேகப்பந்துவீச்சு பயிற்சியாளராக குல் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், சுழற்பந்துவீச்சுப் பிரிவுக்கு அஜ்மல் தலைமை தாங்கவுள்ளார்.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் ஆப்கானிஸ்தான், நியூசிலாந்துக்கெதிரான தொடர்களின்போது பாகிஸ்தானின் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக குல் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில்

# தடைதாண்டலில் முதலிடம் பெற்ற நௌசாத்

அஸ்ஹர் இப்றாஹிம்

தேசிய இளைஞர் விளையாட்டு விழா நிகழ்வில் அம்பாறை மாவட்டம் ஒலுவிலைச் சேர்ந்த இலங்கை இராணுவப் படையணி வீரர் முஹம்மது நௌஸாத், 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 53.14 செக்கன்களில் தடைதாண்டி முதலிடத்தைப்பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டார்.

அத்துடன், 4 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் நௌஸாத்தை உள்ளடக்கிய அணி பங்கேற்று மூன்றாமிடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது.



## யூரோ கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# சமநிலையில் இங்கிலாந்து-வட மசிடோனியா போட்டி

ஐரோப்பிய கால்பந்தாட்ட சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ண தகுதிகாண் போட்டிகளில், வட மசிடோனியாவில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து சமப்படுத்தியது.

இங்கிலாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலானது ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்ததுடன், வட மசிடோனியா சார்பாகப் பெறப்பட்ட கோலை எனிஸ் பார்ட்ஹி பெற்றிருந்தார்.



இந்நிலையில், ஜேர்மனியில் நடைபெற்ற உக்ரேனுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் சமப்படுத்திய இத்தாலி, யூரோ கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, வட அயர்லாந்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் டென்மார்க் தோற்றது.

## மினுவாங்கொட நாலந்தா ஆண்கள் கல்லூரியை

# வாதுவ மத்திய கல்லூரி வென்றது

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுக்குட்பட்ட பிரிவு மூன்று கடினபந்து கிரிக்கெட் தொடரில், அண்மையில் நடைபெற்ற மினுவாங்கொட நாலந்தா ஆண்கள் கல்லூரியுடனான போட்டியில் வாதுவ மத்திய கல்லூரி வென்றது.




இப்போட்டியில் முதலில் துடுப்படுத்தாடிய மினுவாங்கொட நாலாந்தா ஆண்கள் கல்லூரி, 35 ஓவர்களில் சகல விக்கெட்டுகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 94 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வாதுவ மத்திய கல்லூரி, 22.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில், வெற்றி இலக்கை அடைந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 22 நவம்பர் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.